RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s71

OPEN ACCESS

# வாடாமல்லி புதினம் கவனப்படுத்தும் சுயம்பு என்னும் விளிம்பு நிலை மானுடன்

பெ. முத்துராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை, பெரம்பலூர்--621116, தமிழ்நாடு, இந்தியா

# The life of a marginalized ransgender person (Suyambu) as focussed in the novel ‘Vaadamalli’

**P. Muthuraj [a, *]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Veppanthattai, Perambalur-621116, Tamil Nadu, India

* Corresponding Author: muthurajphd@gmail.com

Received: 09-12-2021
Revised: 15-04-2022
Accepted: 22-04-2022
Published: 18-06-2022

**ABSTRACT**

S. Samuthiran’s “Vaadamalli” is a novel that projects the difficulties and sufferings undergone by transgenders in this society. This world has differentiated men and women but hasn’t given recognition to transgenders. These transgenders have been suffering in society without getting proper recognition. They have been fighting to get equal rights as other genders and live normal human lives which have been denied to them by society. A particular society has even gone to the extent of ill-treating and teasing them in return for their fight for rights. These transgenders have been stamped as refugees and are people who live on the edge. If this society can recognize men and women it should give that equal recognition to these transgenders too. As we know X chromosome stands for women and Y for men. This is the scientific reality. An error in their chromosomal structures brings about these behavioral changes in them which are beyond their control and all these happenings are mere science. The transgenders fail every time they try to prove this in society. Like the character named “Suyambu” in the novel who fights for the rights of transgenders, there should be organizations who help them live a peaceful life. There are still limitations for transgenders, for instance, using a public toilet. They aren’t given jobs in all fields. To conclude, the feelings and rights of transgenders should be taken into consideration and respected. Before anyone in society accepts them, their own family should accept them to avoid criticism from society.

**Keywords:** Vaadamalli, Transgenders Life, Samuthiran, Transgenders Recognition

## முன்னுரை

பண்டையத் தமிழ்ச் சமூகம் இலெமூரியாவில் முளை கொண்டு பல்வேறு உலக நாடுகளில் வேரூன்றியுள்ளது. இச்சமூகம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்பேரண்டப் பெருவெளியில் பயணப்பட்ட போதிலும் அதன் பண்பாட்டுக் கூறுகளையும் பழமரபுச் சடங்குகளையும் எவ்விதத் திரிபின்றி தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்பதை யாரும் மறுத்தற்கில்லை. இப்பேரண்ட உயிர்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்துவர். இவ்வுயர்திணை உயிர்களை ஆண், பெண் என்று பாகுபடுத்தி பழக்கப்பட்ட இம்மனித சமூகம் குரோமசோம்களின் குளறுபடியால் மூன்றாம் பாலாய் உருவெடுத்த அலிகளை அதிகாரச் சமூக அமைப்பு சாமான்ய மானுடப் பிறவியாகக்கூட

மதிப்பிட மறுக்கிறது. அலிகள் தங்களுடைய இருப்பை நிலைநாட்டுவதற்கும் தங்களுடைய உரிமைகளை அடையாளப் படுத்துவதற்கும் தாங்களும் சக மனிதர்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்கும் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவ்வுணர்ச்சிப் போராட்டத்தின் பகை முரணாக மேட்டுக்குடிமை சமூக அமைப்பு ஒட்டுமொத்த வன்முறைகளாலும் அடக்குமுறைகளாலும் அலிகளைக் காயப்படுத்தி கேலி, கிண்டல், அவமானங்களுக்கு உள்ளாக்குகின்றனர் (Priya Babu, 2007).

சமூக அமைப்பில் அகதிகளாக அநாதிப்படுத்தப்படுகின்ற அலிகள் பொதுத்தளத்திலிருந்து விளிம்பு நிலைக்குக் கீழ்மைப்படுத்தப்படுகின்றனர் (Priya Babu, 2008). ஆண், பெண் என்னும் இருவரையும் இறைவன் படைத்தான் என்பதை நம்புவோமானால் அலிகளையும் அவ்வாறு கருதலில் என்ன தவறு இருக்க முடியும் ஒ குரோமசோம் பெண் என்றும் லு குரோமசோம் ஆண் என்றும் கூறும் மருத்துவ அறிவியல் உண்மையெனின் லு என்பது ஒ என்பதின் காலொடிந்த வடிவமாகக் கொள்ள வேண்டும். அப்படியெனின் ஆண் என்பவன் குறைப் பிறவியுடையவன். இக்குறைப் பிறவியால் கூட ஏற்றுக்கொள்ள முடியாத அலிகள் தன்னுணர்வுகளையும், தன்னிருப்பையும் சமூகப் பொதுத்தளத்திற்கு நகர்த்துவதற்கு முயன்று முடிவழிந்து போகின்றனர். இவ்வலிகளின் உள்ளப் பிரக்ஞைகளைக் கருவாகக் கொண்டு பிரசவமான புதினமே சு. சமுத்திரத்தின் வாடாமல்லி. இப்புதினத்தில் சுயம்புவை வாடாமல்லியாக வடிவமைத்துள்ளார். இச்சுயம்பு அலியாகத் தன்னை உருமாற்றிக்கொண்டு சமுதாயத்தில் வாழ நிர்கதியற்று உடலாலும் உள்ளத்தாலும் வன்முறை, வன்மங்களுக்கு ஆளாக்கப்பட்டுத் தனக்கான சுய உணர்வுகளை உயிர்ப்பிக்க, நிலைநாட்டப் போராடுகின்ற தன்மைகளையும் விளிம்பு நிலையிலிருந்து பொதுத்தளம் நோக்கிக் கொணரப்படுவதற்கு அலிகள் பற்றியத் தவறான புரிதல்களையும் சமூகத்திற்குப் புரியவைப்பதற்கும் படைக்கப்பட்ட புதினத்தில் பொருளாதார, வாழ்வியலில் சமன்பாடற்ற அலிகளைக் கீழமை நிலைக்கு ஒதுக்குகின்ற நிலைகளையும் மூன்றாம் பாலாய் வேறுபட்டிருக்கும் அலிகளைச் சக உயிராகவோ மானுடப் பிறவியாகவோ அடையாளத்தை முன்னிறுத்தப்படுகிறதா என்பதை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## விளிம்பு நிலை மக்கள்

பொருளாதார, சாதிய, சமூக அடுக்கமைவில் மக்களை மேல்தட்டுவர்க்கம் கீழ்த்தட்டுவர்க்கம் என வகைப்படுத்துவர். இக்கீழ்த்தட்டு மக்கள் சாதி, சமய, பொருளாதார, தொழில்மயமான கட்டமைவுகளில் புறவயப்பட்டவர்களாவர். இவர்கள் சமூகப் பொதுத்தளத்தின் மையப் புள்ளியில் இருந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுக் கீழ்மைப்படுத்தப்படுகின்றனர். மேலும், அவர்களைக் காட்சிப் பொருள்கள் போன்றும் நுகர்ச்சிக்குரியவர்களாகவும் பார்க்கின்றனர். இவ்விளிம்புநிலை மக்கள் ஒடுக்குகின்ற சமூகத்தின் மீது எந்தவிதமான தாக்கத்தையோ அழுத்தத்தையோ ஏற்படுத்த முடியாத அளவிற்குப் பொருளாதார கட்டமைப்பில் மிகவும் பின்தங்கி தங்களுக்கான சாமான்ய தகுதி பெற முடியாத சமூகக் காரணிகளால் விளிம்பு நிலையில் புறந்தள்ளப்படுகின்றனர். மேலும், சமூகம் கொடூரமான வன்முறைப் புரிதல்களை விளிம்புநிலை மக்கள் மீது தெளிக்கின்றன. விளிம்புநிலை மக்களாக தேவதாசிகள், பாலியல் தொழிலாளிகள், அலிகள், தொழுநோயாளிகள், அநாதைகள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள், பிச்சைக்காரர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், செருப்புத் தைப்பவர்கள், பிணவறைப் பணியாளர்கள், தலித்துகள், தலித் பெண்கள் என வரையறைப் படுத்துகின்றனர். இவர்கள் மேட்டிமை அதிகாரச் சமூக அமைப்பின் மையத்திலிருந்து விளிம்பு நிலையில் தங்களின் விருப்பு, தேவை, அங்கீகாரம், உரிமை, சுதந்திரம் என்னும் சமூக அடையாளங்களை மீட்டெடுக்க முயன்று கொண்டு இருக்கின்றனர்.

## விளிம்பு நிலையில் அலிகள்

தொன்மக் குடிகளின் சமூக அமைப்பில் மனுதர்மம் மனிதர்களை ஆண், பெண் என்று பிரித்து வைத்துள்ளது. அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஆண் உடலில் பெண் உணர்வும் பெண் உடலில் ஆண் உணர்வும் சுமந்து திரிகின்ற அலிகள் தங்களுக்கான தனிச் சமூகக் குழுவாகச் செயல்படுகின்றனர். இவர்களை அலி, பேடி என்று தொன்ம இலக்கியங்கள் குறிப்பிட்ட போதிலும்

சமூகம் இவர்களை ஒம்பது, பொட்டையன், பெண்டு, ரெண்டுங்கெட்டான், கீரவடை எனப் பெயரிட்டுச் சமூக வாழ்வியலில் புறக்கணித்தும், ஒதுக்கியும், கீழ்மைப்படுத்தியும், அவமானப்படுத்தியும், இழிவுபடுத்தியும் அவர்களது உடல், உள்ள உணர்வுச் செயல்பாடுகளைக் கொடூர துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குகின்றனர். இக்கால இலக்கியங்கள் இவர்களை அரவாணிகள், திருநங்கைகள் என மேன்மைப்படுத்த முயன்றபோதிலும் இவர்களுக்கான தனித்த அடையாளங்களைச் சமூக மதிப்பு மிக்கதாக மாற்ற முடியவில்லை என்பதே உண்மை. அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மொழி என்னும் நிலைகளில் இவர்களை முன்னெடுப்போமானால் சமூகப் பொதுத்தளத்தின் மையப் புள்ளிக்கு நகர்த்த முடியவில்லையென்றாலும் ஆண் பெண் போன்று அலிகளை மனிதப் பிறவியில் ஒன்றிணைத்துக் காணமுடியும். ஆனால் அலிகளைக் கொடுமைப்படுத்தியே பார்க்கப்பட்டுப் பழக்கப்பட்ட மனிதர்கள் அவர்களை அவ்வளவு எளிதாக சகவினமாகப் பார்க்க இடங்கொடுப்பதில்லை.

"அப்பா சூடு போட்டார்! அண்ணன் சூடு கொடுத்தான்! அப்படியும் எனக்கு சொரணை இல்லாம போயிட்டே. எங்க அக்கா எவ்வளவு சொல்லியும் என்னால சேல கட்டாம இருக்க முடியலையே. பொம்பளங்க பக்கத்துல அவங்களோடு அவங்களா நிக்கணுமுன்னு வருகிற ஆசையைத் தடுக்க முடியலையே" இயல்பான மனிதர்களுக்கு உரித்தான காதல், காமம், பசி, தூக்கம், கருணை இவர்களுக்கும் உண்டு என்பதை மறந்துவிடுகின்றனர் (Samuthiram, 1997).

சாண் பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை என்று மார்தட்டிக் கொள்ளும் இவ்வாதிக்கச் சமூகம் குறிப்பிட்ட பருவத்தில் குரோமசோம்களின் மாற்றங்களால் ஆண் உடலில் பெண் உணர்வும் பெண் உடலில் ஆண் உணர்வும் மெல்ல மெல்ல மாற்றமடைகிறது. இம்மாற்றத்தை அறிவியல் மாற்றமாக ஏற்றுக்கொள்ள முடியாத குடும்ப உறவுகள் அலிகளைத் தம்முடைய குடும்பத்தில் ஒருவர் என நினையாது ஒரு கொடூரமான அருவறுக்கத்தக்க வடிவமாகவே கருதுகின்றனர். இந்த இழிநிலைகளைச் சமூக மக்களிடம் அகற்றப்பட வேண்டுமெனில் இதற்கான அறிவியல் அறிவை போதிய விழிப்புணர்வுடன் புரிதலுக்கு உள்ளாக்கப்படுவற்கு அறிவுசார் உலகத்தின் கடன் எனத் தோன்றுகிறது. "பிறவியில் ஒ, லு குரோமசோம் கொண்ட மனிதப் பிறவியை நாம் ஆண் என்கிறோம். இந்த ஆண் பெண்மை பட பல வழிகள் உண்டு. இந்த ஆண் சிசு கருப்பையில் வளரும்போது அந்தக் கருப்பையில் ஹவோ லு ரசாயனங்கள் தேங்கி இருந்தால் இவை அக்கருவில் லு குரோமசோமை செயல் இழக்கச் செய்கின்றன. இதனால் என்னதான் பிறவியில் ஒ, லு ரக மனிதராக இருந்தால் லு அடங்கிப் போனதினால் இவர் பெண் தன்மையைப் பெற நேர்கிறது". சமூகத்தின் விளிம்பு நிலக்குத் தள்ளப்படும் இவ்வலிகளின் முகபாவனையும் உடலும் உள்ளப்பிரச்சனையும் மரபணு மாற்றத்தால் நிகழ்வதேயன்றி அவரவர்களால் தேர்ந்தெடுத்துக்கொள்வதல்ல. இவ்வுருமாற்றத்திற்குப் பெற்றோர்களே முழுக் காரணமானவர்கள். அவ்வாறு இருந்தும் அவர்களே இவ்வலியினரை விளிம்பு நிலையில் கீழ்மைப்படுத்துவது கொடுமையிலும் கொடுமையாகும் (Makarasan, 2007).

## வாய்மொழி கதையாடலில் அலிகள்

குஜராத்திலுள்ள மேவார் பகுதியில் ஆண்டு வந்த அரசன் வேட்டைக்குச் சென்றபொழுது, அங்கு நீண்ட கூந்தலையுடைய அழகிய பெண்ணை (காளிதேவி) கண்டான். அவள் அழகில் மயங்கி அவளிடம் கூட நினைத்து இரவில் வருவதாகச் சொல்லிச் சென்றுவிட்டான். நடந்தவற்றைக் கேட்டறிந்த அவளுடைய தம்பி கோபங்கொள்கிறான். அவளோ மன்னனின் எல்லைக்கு உட்பட்ட பகுதி என்பதால் நாம் அவனுடைய கட்டளையை மீற முடியாது எனச் சமாதானமாகின்றாள். இத்துன்பத்தைக் களைவதற்காக அவளுடைய தம்பி இதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான். தன்னுடைய அக்காவை காப்பதற்காக ஒரு திட்டம் தீட்டினான். அக்கா போன்று பெண் வேடம் புனைந்து மன்னனிடம் உறவு கொண்டான். இக்கோலத்தைக் கண்ட காளிதேவியோ அவனை வெறுத்துத் தன்னுடைய கூரிய வாளால் அவனது ஆணுறுப்பை அறுத்தெறிந்தாள். தம்பிகாரனோ செய்வதறியாது திகைத்து தனக்கான எதிர்கால வாழ்வு பற்றி காளிதேவியிடம் வினவ, “தம்பி உன்னைப் போன்ற உணர்வு மாற்றத்தால் ஆணுடன் உறவு கொள்ளும் மனோபாவத்துடன் இயற்கையாகவே சிலர் பிறப்பர் அவர்கள் ஆணாகப் பிறந்தாலும் சிறிது காலத்திற்குப் பின் தன்

ஆணுறுப்பை அறித்தெறிந்து பெண்ணாக மாறுவர். அவர்கள் உன்னையே தெய்வமாக நினைத்து உன் பெயரினாலேயே தன் ஆணுறுப்பை நீக்கம் செய்வர். இவர்களே உன் சந்ததி என்றாள்" இக்கதை வாய்மொழியாக வழங்கி வருகின்றது (Makarasan, 2007)..

## இலக்கண இலக்கிய வகைமையில் அலிகள்

தொன்மைக் கால இலக்கணங்கள், சங்க இலக்கியம், காப்பியங்கள், புராணங்கள், பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என்னும் எல்லா வகை இலக்கியங்களிலும் மூன்றாம் பாலினம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்" ஆண்மைத் தன்மை குறைந்து பெண்மைத் தன்மை மிக்கு விளங்கும் ஆண்மைத் திரிந்த பெயர்ச்சொல் என்று குறிப்பிட்டுள்ளது தொல்காப்பியம் (Balasundaram, 2012). இதைப் பின்பற்றி நன்னூலார், "பெண்மைவிட்டு ஆண் அவா வுவபேடு ஆண்பால், ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்" அலி, பேடு என்னும் சொல்லாட்சிகளை உயர்திணைக்குள் திரிந்த பெயராகக் குறிப்பிட்டுள்ளது. மக்கட் பிறப்பிற் சிறப்பில்லாத குருடு, வடிவில்லாத தசைத்திரளும், கூனும், குறளும், ஊமும், செவிடும், மாவும், மருளும் உளப்பட உலகத்து உயிர்வாழ்வார்க்கு எட்டுவகைப்பட்ட எச்சமென்று புறநானூறு பதிவு செய்துள்ளமை நோக்கத்தக்கது. "இறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும் கூனும் குறளும் மூமுஞ்செவிடும் மாவு மருளுமுளப்பட வாழ்நர்க் கெண்பேரெச்சம்" அலியையும் உடல் குறைபாட்டில் குறிப்பிட்டுள்ளது. மணிக்கவாசகர் "பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்" (திருவெம்பாவை) என்று மூன்றாம் பாலை முறைப்படுத்தியமையும் ஔவையாரும்"கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்று குறைப் பிறவியாகவே குறிப்பிட்டுள்ளார். மேலும், இறைவனே ஓர் உடலில் ஆண் பாதி, பெண்பாதி உருக் கொண்டு அர்த்தநாரீஸ்வரராக காட்சி தந்தமையும், பத்மாசூரனிடமிருந்து சிவனைக் காப்பதற்குக் கண்ணன் அலி வேடமாகிய மோகினி அவதாரம் கொண்டமையும் அம்பை பீஷ்மரை வீழ்த்த சிகண்டி என்னும் வேடம் புனைந்தமையும் புராணங்கள் பதிவு செய்துள்ளன. இவ்வாறாக எல்லாவகை இலக்கியத் தளங்களிலும் அலிகளை குறைப் பிறவியாகவும் குறிப்பிட்டுள்ளமை காணமுடிகிறது. எனவே, அலிகள் விருப்பத்திற்கு ஏற்ப மாறுபவர்கள் அல்ல. இயற்கையாகவே உருவாகக் கூடியவர்கள். ஆண், பெண் இருவரையும் படைத்தவர் இறைவன் என்பதை நம்புவோமானால் இறைப்படைப்பில் இன்னொரு அதிசயம் அலி என்பதை யாவரும் நம்பியே ஆக வேண்டும். மேலும், இறைப்படைப்பில் எப்பிறப்பும் கேலிக்குரியதல்ல என்பதை அதிகார குடிமை வர்க்கம் புரிந்து செயல்படுதல் மானுட தர்மம் ஆகும்.

## வாடாமல்லி

சு. சமுத்திரத்தின் வாடாமல்லி என்னும் புதினம் அலியின் வாழ்வியல் அவலங்களை மையமிட்டு எதார்த்தமாகவும் மிகவும் நேர்த்தியாகவும் அலிகளுக்கான வாழக்கைப் பயணத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடியதாகவும் படைத்துள்ளார். அலிகள் சமுதாயத்தில் வாழத் தகுதியற்றவர்களாக சமூக பிரக்ஞைகளில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாதவர்களாக தானே தனியாக வாழப்பிடிக்காமல் மரணத்தின் விளிம்பில் தள்ளப்பட்டுத் தமக்கான உரிமைகளை மீட்டெடுக்கும் குழுவினருடன் சங்கமிக்கின்றனர் (Samuthiram, 2009).

சுயம்பு பொறியியல் படிப்பிற்காக கல்லூரியில் சேர்ந்துள்ளான். அப்பருவத்தின் அவனுக்குப் பெண்மை தன்மை வெளிப்படுகிறது. அதாவது ஆண்களுடன் நாணப்படுவதும் பெண்களிடம் பேசத்துடிப்பதும், அவர்கள் அருகிலேயே அமர்ந்திருக்க வேண்டும் என்னும் மனோபாவமும் தோன்றுகின்றன. சேலை, பூ, பொட்டு வைத்துக்கொள்ள வேண்டும் என அவா வெளிப்படுகிறது. அதனால் படிக்க விருப்புக்கொள்ளாது வீட்டுக்கு வந்து சேர்கிறான். அங்கு அப்பா பிள்ளையார், அண்ணன் ஆறுமுகப்பாண்டி, அம்மா வெள்ளையம்மா, அக்கா மரகதம் எவ்வளவு சொல்லியும் கல்லூரிக்குச் செல்ல மறுக்கிறான். கல்லூரியில் டேவிட் என்பவனை ஒருதலையாகக் காதல் கொள்கிறான். அதையும் அவனிடம் வெளிக்காட்ட முடியவில்லை. வெளியே சொல்ல முடியாமலும், தன்னுணர்வின் சுதந்திரத்தைப் பெற முடியாமலும் தவிக்கிறான். ஒரு கட்டத்தில் அக்காவின் ஆடை,

நகை, பொட்டு முதலிய பொருட்களை அணிந்து மரகதத்தின் தம்பியை மறைத்து தங்கையாக வெளிப்படுகிறான் சுயம்பு. இந்த விவரம் தெரிந்த காரணத்தால் அக்காவின் திருமணம் தடைபடுகிறது.

குடும்ப உறவுகளால் கொடூரமாக அவன் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு உடலாலும் உள்ளத்தாலும் காயப்படுத்தப்பட்டு சிதைக்கப்படுகிறான். தன்னால் வாழ்வை வெறுத்து வீட்டைவிட்டு வெளியேறுகிறான். அவனை பச்சையம்மாள் என்ற அலி அடைக்கலம் தந்து தன் மகள் போல் பார்த்துக்கொள்கிறாள். அப்பொழுதும் அதிகாரச் சமூக வர்க்கம், காவல்துறை போன்றவர்களிடமும் அடி, உதை, மிதிபட்டு, கேவலப்பட்டு தீராத்துயரம் கொள்கிறான். அலி என்னும் மாற்றத்திற்கு கிடைத்தவற்றை பொருத்துக்கொள்ள முடியாது சுகமான உணர்வுகளை வெளிப்படுத்துவற்காகவே ஏற்றுக்கொள்கின்றான். பின்னர் அலிகளின் ராணியாக கங்காதேவியின் வாரிசாகத் தத்தெடுக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு தன் பெயரை மேகலை என்று மாற்றிக் கொள்கிறான். காலம் கடந்து செல்ல தம் சொந்த ஊரான நல்லாம்பட்டிக்கு வருகிறான் அங்குள்ள நிலைகயைக் கண்டு மனங்கலங்குகிறான். தன்னைக் காண காலமெல்லாம் ஏங்கி ஏங்கி இறுதியில் கடிதம் எழுதி வைத்துவிட்டு அக்கா இறந்த செய்தியைக் கேட்டு மன வேதனை கொள்கிறான். தனக்காக பரிந்து பேசக்கூடியவள் இறப்புச் செய்தியறிந்து தாங்க முடியாத துயரத்தில் துடிக்கிறான். மேலும் தன் குடும்ப உறவுகளுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்துவிட்டு மீண்டும் வெளியேறுகிறான். தன் இனம் சார்ந்த சமூக உறவுகளுக்காகப் பொருளாதார உதவிகளைச் செய்துவிட்டு மீண்டும் வெளியேறுகிறான். தன் இனம் சார்ந்த சமூக உறவுகளுக்காக உரிமையை நிலைநாட்ட சமூகத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான் (Samuthiram, 2016).

## சமூகத் தளங்களில் சுயம்பு என்னும் அலி

சமூகத்தில் அலிகள் பற்றிய அறிவியல் புரிந்துணர்வு முழுமையாக இல்லை என்றே கூற வேண்டும். ஆண் பெண் ஆகிய இருபாலிற்கும் இயங்கு நிலை சார்ந்த மூன்றாம் பாலினத்தைப் பகை முரணாகவே சமூகம் கட்டமைத்துள்ளது. மேலும் குடும்பம் என்னும் நிறுவனத்தில் அனுமதிக்கப்படாத அல்லது இணைய மறுக்கின்ற சமூகச் சூழலில் தான் அலிகள் காணப்படுகின்றனர். உடலில் சுரக்கும் சுரப்பிகள் அலிகளுக்குப் பெண்ணுணர்வைத் தருகிறது. எதார்த்த மனநிலையை பொதுத்தளத்தில் பொருத்திப் பார்க்க முடியாத சமூகம், வக்கிர மனநிலையோடு இழிவுபடுத்தப்பட்டு விளிம்பு நிலையில் ஒடுக்கப்படுகின்றனர். "வாலிபால் காரனையே விழுங்கிவிடுவது போல் பார்த்த சுயம்புவை ஒருவன் முடியைப் பிடித்து இழுத்தான் கூடைப்பந்துக்காரி ஒருத்தி 'குத்து' என்கிற மாதிரி வலது கையை முஷ்டியாக்கி வாயைப் பாதியாக்கி அந்தரத்தில் ஒரு குத்து விட்டாள். இதனால் அவனைக் குளிர்விக்க வேண்டும் என்பதற்காக ஒரு செகனாண்ட் ஹீரோ சுயம்புவின் மூக்கைப் பலமாக இழுத்துவிட்டான். ஒருத்தி கால் செருப்பை கழட்டி எல்லோரையும் அடிக்கப் போவது போல் உயரே தூக்கினாள் இப்படி எல்லாரும் அவன் உடம்பை ஆளுக்கு ஆள் உறுப்பு உறுப்பாகப் பிடித்துக் கொண்டு அவனை இம்சை செய்தார்கள்" சமூகம் அங்கீகரிக்கப்பட்டுள்ள இருபாலின் வரையறைக்குள் தம்மைப் பொருத்திக்கொள்ள வேண்டும் அவ்வாறு பொருந்த மறுப்பவர்கள் பாலியல் மீறல் உள்ளவர்கள் சமூகத் தளத்திலிருந்து புறந்தள்ளப்படுகிறார்கள் (Samuthiram, 1997). ஒருவருக்குப் பாலின மயக்கம் ஏற்படுவதற்கு அவர்கள் காரணமில்லை என்பது குடும்ப உறவுகள் புரிதலுக்கு அப்பாற்பட்டே நகர்த்தப்படுகிறது" அண்ணன்காரன் கால்களை இறுக்கிப் பிடித்த மரகதத்தின் கைகளை மிதித்துக் கொண்டே முன்னேறினான். கையிலுள்ள இரும்பு முனையை சுயம்புவின் காலில் வைத்தான் புடவை முடிய முட்டியில் வைத்தான். அங்குமிங்கமாய் நெளிந்த இடுப்பின் இருபக்கமும் வைத்தான். ரிப்பன்கள் கட்டிய பிடரியில் வைத்தான். பொசுங்கிய வாடையோடு பட்ட இடமெல்லாம் பொசுங்கியது. பிள்ளையார் பெரிய மகனின் வேலையை மேற்கொண்டார். ஒரேகுத்து. சுயம்பு வாயில் ரத்தம் ஒரே சூடு. தோள்பட்டையில் வைத்த கம்பியை எடுக்கவில்லை, எரிந்த புகை மறையவில்லை" (Samuthiram, 1997).

சமூக படிநிலைகளில் எல்லா மக்களாலும் புரிந்துகொள்ள வேண்டிய உடல், உளம் சார்ந்த செய்திகளைக் கேலிப்பொருளாக்கி, அருவறுப்பானவர்கள் போன்று கருதும் போக்கி சமூகப் பொதுத்தளங்களில் புரையோடிக்கிடக்கின்றது. அவர்களை இப்படித்தான் வாழ வேண்டும் என்று

கட்டுப்படுத்துகிறது. அவர்கள் விரும்பிய வாழ்க்கை வாழ மறுக்கப்படுகிறது. "சுயம்பு துடியாய்த் துடித்தான் படிப்பு போய்விட்ட கவலை, அவனுக்கு இல்லாமல் இல்லை. எதிர்காலமே அற்றுப்போய் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க முடியாமல் நிகழ்காலத்தில் நிற்க முடியாமல் சுருண்டு கிடந்தான். எவ்வளவு நேரம் அப்படிக் கிடக்க முடியும், அங்குமிங்குமாக லாந்தினான். அக்காவின் கல்யாணம் முடிந்ததும் தற்கொலை உட்பட எதையாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான்" உடல், உள்ளம், உளவியல் சார்ந்த உணர்வுகளில் இருபாலினரிடத்திலிருந்து வேறுபட்ட மூன்றாம் பாலினரின் உணர்வுகளைப் பொதுவெளியில் விவாதப் பொருளாக்காது, தனிமனித சுதந்திரங்கள் நசுக்கப்படுகிறது. அவர்களை அவமானம், கேவலம், இழிவுகளை முன்னெடுத்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும்போது சாதி, மத பேதமற்ற மூன்றாம் பாலினத்தவர்கள் தமக்கான தனிச் சமூக அடையாளத்துடன் வாழ முயல்கின்றனர் (Samuthiram, 2009).

## சுயம்பின் கைக்கிளைக் காதல்

குடும்பம், சமூகம் என்னும் இரண்டு தளங்களிளும் கொடூரமான தாக்குதல்களை அலிகள் மீது நிகழ்த்துகிறார்கள். இவ்வன்முறைக்கு உள்ளான அலிகள் செய்த தீண்டத் தகாத செயல்கள் தான் என்ன? என்று பார்த்தோமானால், தன்னைப் பெண்ணாக உணருகின்றனர். இவ்வாறு ஒரு ஆண் பெண்ணாக மாற்றமடைவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத குடும்ப உறவுகள் இம்மாற்றத்தை அவமானமாக, கேலிக்குரியதாக, அருவருக்கத்தக்க இழிவாக கருதுவதனால் குடும்பத்தினர் அவர்கள்மீது காட்டும் கொடூரமான எதிர்வினைகளே அலிகளைத் துன்புறுததி சமூகத்தில் வாழத் தகுதியற்றவர்களாக ஒதுக்கப்படுகின்றனர். இவர்களும் சாமான்ய மனிதர்கள் தான். எனவே தான் பெண்களுக்கு ஏற்படக்கூடிய அத்தனை உணர்வுகளும் அலிகளுக்கும் ஏற்படுகின்றன. அவர்களைப் போன்று உடை, நடை, பாவனை மட்டுமல்லாது, ஆடவர்கள் மீது காதல் உணர்வும் தோன்றுகிறது. இக்காதலை வெளிப்படுத்த முடியாமல் கைக்கிளையாக காதல் கொள்கிறான் சுயம்பு. “டேவிட் சுயம்புவின் இதயத்தின் பக்கம் ஸ்டெத்தாஸ்கோப்பை வைத்தான், பிறகு வயிற்றில் கை வைத்தான், பிறகு கேட்டான் "தம்பிக்கு இப்ப எப்படி இருக்குது" சுயம்புக்கு வெட்கமாகிவிட்டது. வயிற்றில்பட்ட டேவிட்டின் கையைப் பிடித்து அது விலகாதபடி வைத்துக்கொண்டான். நாணிக் கோணிப் பேசினான். என்னைத் தம்பின்னு சொல்லாதீங்க வேணும்னா பேரு சொல்லிக் கூப்பிடுங்க" அவன் எல்லாத் தளங்களிலும் அடி, உதை, துன்புறுத்தலுக்கு ஆளானபோதும் டேவிட் என்று சொன்னவுடன் எல்லாத் துயரமும் பஞ்சாய் பறந்தது. டேவிட்டின் மீது தீராக் காதல் கொண்டான்". சுயம்பு புடவையை மட்டும் தான் கட்ட நினைத்தான். ஆனாலும் அந்தப் பாவாடை அது உடம்பில் பட்டாலே ஒரு சுகம். பேண்டுக்கு மேலே கட்டிக்கொண்டான். ஜாக்கெட் இல்லாத ஒரு பாவாடையா...பிரா இல்லாத ஒரு ஜாக்கெட்டா... சுயம்பு பெண்ணாகிவிட்டான். பீரோ கண்ணாடியைப் பார்த்து குங்குமமிட்டுக் கொண்டான். அப்படி குங்குமம் இட்ட தன் சொந்தக் கையையே டேவிட்டின் கையாகப் பாவித்துக்கொண்டான் சுயம்பு கொண்ட இக்கைக்கிளைக் காதலை ஆசிரியர் மிகவும் நேர்த்தியாகவும் நாகரீகமாகவும் பதிவு செய்துள்ளார் (Samuthiram, 2016).

## விளிம்பு நிலையில் அலிகளின் தொழில்கள்

அலிகள் உணர்ச்சியற்றவர்கள், சமூகத்தில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத, எதற்கும் பயனற்றவர்களாக நோக்கப்படுகின்றனர். அலிகள் தமக்குள்ளேயே சாதி, சமய, பேதமற்ற சமூகமாக கூடி ஒன்றிணைந்து உறவுகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இவர்கள் வாழ்க்கையை நகர்த்துவதற்குப் பொருளாதாரத் தேவை முக்கியமானவொன்றாகும். ஆனால் இவர்களைத் தொழில் நிறுவனங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள் இதுபோன்று வருமானம் வரக்கூடிய வேலைகளில் அமர்த்துவதில்லை. அதனால் இவர்களுக்கான தொழில்களை இவர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளக் கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். "பாலியல் தொழில் என்பதை விடவும் அவர்களுக்கு அம்மாதிரியான தொழில் மட்டும் தான் செய்ய முடியும் என்கிற நிலைமைகள் இருக்கின்ற போது சமூகத்தின் பொதுப்புத்தி என்பது அரவாணிகளைப் பாலியல் தொழில் செய்வதற்கென்றே

பிறந்தவர்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்பார்வையானது அறியாமையால் வருவதல்ல. ஏற்கனவே நிலவுகிற கருத்தியல் மதிப்பீடுகளின் தொடர்ச்சியாக வருவது இம்மாதிரியான மதிப்பீடுகள் தோன்றுவதற்கு அரவாணிகளின் நடத்தை முறைகள் காரணமாகச் சொல்லப்படுகின்றன என்று மகாராசன் குறிப்பிட்டுள்ளார் (Makarasan, 2007). இயல்பான மனிதர்களுக்கு உரித்தான காதல், பசி, இவர்களுக்கும் உண்டு என்பதை மறந்துவிடுகின்றோம். "இதையாவது கேளுங்க சார்... பங்களா விபச்சாரத்துக்கும், பப்ளிக் விபச்சாரத்துக்கும் என்ன சார் வித்தியாசம்... எங்கள மட்டும் ஏன் சார் இந்தப் பாடு படுத்துறீங்க" என்ற பச்சையம்மாள் தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறாள். அதாவது விபச்சாரத் தொழில் செய்யக் கூடிய அலிகளைக் காவல் துறையினர் எவ்விதப் புகார்களுக்கும் இவர்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துப் பழகிப் போனவர்கள். இன்ஸ்பெக்டர் இப்போது பச்சையம்மாவைத் திரும்பிப் பார்த்தார். "அந்த சின்னப் பொட்டையை வச்சு நீ பொழப்பு நடத்தணும், நான் அதுக்கு ஆமாம் போடணுமா... இவன எப்படிக் கவனிக்கணும்னு எங்களுக்குத் தெரியும்" என்று தன் வக்கிரத்தை வெளிப்படுத்தினார் (Samuthiram, 1997). ஆண் உடம்பிற்குள்ளே பெண்ணாய்த் தவிக்கின்ற சுயம்பு காலவோட்டத்தில் கரைந்து அலிகளின் ராணியாக கங்காதேவியின் மகளாக உருப்பெற்றுத் தன்னை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்திக்கொண்டு தன் பெயரை ‘மேகலை’ என்று மாற்றிக்கொள்கிறான். இவ்வறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கான தேவை என்னவெனில் பெண்ணாக உணரும் இவர்கள் தங்களுக்கு விருப்பமான ஆண்களுடன் உடலுறவில் ஈடுபடும்போது இவர்களுடைய ஆணுறுப்பு தடையாக இருப்பதாக உணர்வதால் அவ்வாணுறுப்பை அறுவை சிகிச்சை செய்வதன் மூலம் உடலளவிலும் ஒரு பெண்ணாகவே தன்னை மாற்றிக் கொள்கின்றனர். இம்மாற்றம் தன்னுணர்வுகளுக்கும் தொழிலுக்கும் ஏதுவாக அறுவை சிகிச்சை, பிளாஸ்டிக் சர்ஜரி, ஹார்மோன் ஊசி போட்டுக்கொண்டு தன்னை முழுப் பெண்ணாக மாற்றிக்கொள்கின்றனர்.

## முடிவுரை

சமூகம் அலிகள் குறித்தான தவறான புரிதல்களை கட்டமைத்து வைத்திருந்தாலும், அதைக் கட்டுடைத்து சமூக மாற்றத்திற்கான அமைப்புகள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இன்று அலிகளை, அரவாணிகள், திருநங்கைகள் என நாகரீகப் பெயர் சூட்டி அழைத்த போதிலும் அவர்களால் எல்லாத் துறைகளிலும் ஈடுபட முடியாத போக்கே காணப்படுகிறது. பேருந்து, இருப்பிடம், பொதுக் கழிப்பிடம் முதலிய அடையாளங்களில் அவர்களுக்கான தனி அடையாளங்களை இன்னும் ஒதுக்கப்படாமலேயே உள்ளது. விளிம்பு நிலை மக்களாக அடையாளம் காணப்பட்ட தலித், தலித் பெண்கள், நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள் இவர்களுக்கான பொதுத்தள விவாதங்களைக் காட்டிலும் அலிகளை இன்னொரு படி கீழ்மைப்படுத்தி சக மனிதராகக் கருதாது அருவருக்கத்தக்க இழிநிலையில் வைத்தே பார்க்கப்படுகின்றனர். அலிகளுக்கான ஓரினச் சேர்க்கையாளர் என்னும் அங்கீகாரம் வழங்கப்பட்டு அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஆணாகப் பிறந்த அலிகள் உணர்வுகளால் பெண்ணாக உணர்கிறார்கள். அவ்வாறு உணர்வுகளால் ஊடுருவும் போது குடும்ப அமைப்பு பொது வெளிச் சமூகத்தில் ஒதுக்கி வைப்பதை விலக்கிக் கொள்ள வேண்டும். அலிகள் பற்றிய கதையாடல்கள் தொன்மைக் காலம் தொட்டு வந்த போதிலும், அவர்களுக்காக வாழ்வியலில் நிரந்தரமற்றவர்களாக காணப்படுகின்றனர். விளிம்பு நிலையில் ஒதுக்கப்படுகின்ற அலியான சுயம்பு தன் இருப்பையும் தன் உணர்வுகளையும் வெளிக்காட்டப் போராட்டக் குணம் கொண்டு விளங்குகிறான். அவ்வாறு இருந்தபோதிலும் அவனை எல்லாத் தரப்பு வாதிகளும் சுயம்புவை ஒரு மானுடனாக மதிப்பதில்லை என்பதே திண்ணம். எனவே அலிகளுக்கான உணர்வுகள், உரிமைகள், வாழ்வாதாரங்களுக்கு அரசு அமைப்பு சார்ந்து சட்ட ரீதியாக அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும் குடும்பமும், சமூகமும் அலிகளை சக மனிதர்கள் என்று மதிப்பளித்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

## References

Balasundaram, S., (2012) Tholkappiyam Sollathikaram, Periyar University, Salem, India

Makarasan, (2007) Aravanikal : Utaliyal - Ulaviyal – Valviyal, Tolamai Veliyitu, Chennai, India.

Priya Babu, (2007) Aravanikal Samuka Varaiviyal, Thenthisai, Chennai, India.

Priya Babu, (2008) Moondram Paalin Mugam, Sandhiya Pathippagam, Chennai, India.

Samuthiram, S., (1997) Vaadamalli, Vanathi Pathippagam, Chennai, India.

Samuthiram, S., (2009) Vaadamalli, Saratha Pathippagam, Chennai, India.

Samuthiram, S., (2016) Vaadamalli, Neer Publication, Chennai, India.

Tolkappiyar, Tolkappiyam Sollathikaram – Deivasilaiyar Urai, The South India Saiva Siddhantha Publishing Ltd, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License